வாக்குமூலம்

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண்.515/ 2018**

**வழக்கு சாட்சி.1**

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜார்ஜ் ஸ்டீபன் விக்டோரியா |
| தந்தை பெயர் | : | சூசை விக்டோரியா |
| கிராமம் | : | திண்டுக்கல் |
| தாலுக்கா | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | கன்சல்டண்ட் |
| சமயம் | : | |
| வயது | : | **69** |

**31.07. 2023**

**1ம் எதிரி வேறொரு வழக்கில் நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். வழக்கறிஞர் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை . 1.2 எதிரிகள் சார்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>முதல் விசாரணை</u>

1. நான் திண்டுக்கல் அண்ணா நகரில் குடியிருந்து காற்றாழை நிறுவனத்தில் ஆலோசகராக வேலை செய்து வருகிறேன். கடந்த 03.11.2016ம் தேதி எனது தாயார் மேரி பிளோமினாள் கண் ஆப்பரேசனுக்காக நாங்கள் மதுரைக்கு குடும்பத்துடன் வீட்டை பூட்டிவிட்டு சென்றுவிட்டோம். அன்றையதினம் மாலை 5.00 மணிக்கு திண்டுக்கல் எங்களது வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது வீட்டின் மெயின் டோர் உடைக்கப்பட்டிருந்தது.

2.உள்ளே சென்று பார்த்தபோது பெட்ரூம் கதவும் உடைக்கப்பட்டிருந்தது. பெட்ரூமிள் உள்ளே இருந்த இரும்பு பீரோ கதவு உடைக்கப்பட்டு இருந்தது. அதில் இருந்த தங்க நகைகள் 11 பவுன் ( வளையல், மோதிரம், செயின்) திருடுபோய் இருந்தது. நடந்த சம்பவத்திற்கு நகர் வடக்கு காவல் நிலையத்தில் தகவல் சொன்னோம். பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் **(புகார் அ.சா.ஆ. 1 ஆக ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின்பு போலீசார் இரண்டு, மூன்று மாதங்கள் கழித்து எனது வீட்டில் திருடுபோன நகைகளை கைப்பற்றியதாகவும் தெரிவித்தார்கள். திருச்சியில் கைப்பற்றியதாக சொன்னார்கள். யார் திருடினார்கள் என்ற விபரம் எனக்குத் தெரியாது. திருடுபோன நகைகளை நான் நீதிமன்றத்தின் மூலம் மனு தாக்கல் செய்து CRLMP NO. 1690/2017ன் மூலம் பெற்றுக் கொண்டேன். அதற்குரிய

புகைப்படம் மற்றும் CD யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தேன். (**புகைப்படம் மற்றும் CD அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்மந்தமான புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான்தான் எழுதினேன். என்னுடைய தகப்பனார் பெயர் சூசை விக்டோரியா என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் ஆகியுள்ள புகாரில் எனது தகப்பனார் பெயர் ஸ்டீபன் விக்டோரியா என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த நேரத்தில் தவறுதலாக எழுதிவிட்டேன். எனது வீட்டிற்கு அருகே சந்திரன் வீடு, சுருளிராஜ் வீடு, ரஜினிகாந்த் வீடு, விக்டர் வீடு, DSR பங்களா உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அருகில் CCDV கேமரா எதும் பொருத்தப்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாகச் சொல்லப்படும் தேதியில் காலை 10.00 மணிக்கு வீட்டை விட்டு வெளியில் சென்று மாலை 5.00 மணிக்குத்தான் வீட்டிற்கு திரும்பி வந்தோம் என்றால் சரிதான்.

எனது வீட்டின் மெயின் கதவு மரத்தினால் செய்யப்பட்டதா? அல்லது இரும்பினால் செய்யப்பட்டதா என்றால் மரத்தினால் செய்யப்பட்டது. அந்த மரக்கதவை தாழ்பாழ் இட்டு பூட்டு போட்டு பூட்டப்படும் கதவா? அல்லது சாவியால் பூட்டப்படும் கதவால் என்றால் சாவியால் பூட்டப்படும் கதவு. நான் பார்த்தபோது பூட்டு உடைக்கப்பட்டு அந்த இடத்தில் அதன் துண்டுகள் கிடந்தது என்றால் வீட்டின் நுழைவாயில் உள்ள இரும்பு கேட்டின் பூட்டு உடைக்கப்பட்டு அங்கு அந்த பூட்டின் துண்டுகள் கிடந்தது. அவ்வாறு இரும்பு பூட்டை உடைப்பதற்கு சுத்தியல், அல்லது கடப்பாறை போன்ற பலத்த ஆயுதங்களால்தான் உடைக்கமுடியும், அவ்வாறு உடைக்கும்போது சத்தம்கேட்காமல் உடைக்க முடியாது என்றால் சரிதான். பூட்டை உடைக்கும் சத்தம் கேட்பதாக எனது வீட்டிற்கு அருகில் இருந்த நபர்கள் தகவல் எதுவும் எனக்குச் சொன்னார்களா என்றால் இல்லை. நான் புகார் கொடுத்த அன்றே போலீசார் வீட்டிற்கு வந்து பார்த்தார்களா என்றால் நான் புகார் கொடுத்தவுடனே வந்தார்கள்.

போலீசார் வந்து பார்த்தபோதும் அந்த உடைந்த பூட்டு துண்டுகள் வீட்டு வாசலில் கிடந்ததா என்றால் ஆமாம். நான் கொடுத்த புகாரில் யார் வந்து கதவை உடைத்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது பக்கத்து வீட்டில் உள்ள நபர்களை போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்றும், ஒரு வாரம் கழித்தும் வந்து விசாரித்தார்கள். வீட்டு வாசலில் உடைந்த கிடந்த பூட்டு துண்டுகளை போலீசார் எடுத்துச் சென்றார்களா என்றால் இல்லை. புகாரில் எனது வீட்டில் எத்தனை கதவுகள் உடைக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.08.01 13:47:06 +0530

Judicial Magistrate No.II
Dindigul.